திரு. ந. தருமலிங்கம் : மில் துணிகளிலும், பட்டு வேட்டிகளிலும் அகலமாக கறுப்பு சிவப்பு கரை போட்ட வேட்டிகள் வருவது போல் கதர் வேட்டிகளிலும் அந்த மாதிரி கரை போட்ட வேட்டிகள் உற்பத்தி செய்யப்படுமா ?

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி : இப்போது யார் யார் என்ன விரும்புகிறார்களோ அந்தந்தக் கலரில் போடும் முயற்சி நடந்து வருகிறது.

New hotel at Mahabalipuram.

*115 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Tourism Development Corporation has proposed to construct a new hotel at Mahabalipuram with all modern amenities; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(ஆ) மகாபலிபுரத்தில் நல்ல வசதிகள் அடங்கிய ஒரு ஓட்டலைக் கட்டுவதற்கான செயற்குறிப்பு இருக்கிறது. உணவு விடுதி, ஸ்விம்மிங் பூல், டார்மிட்டரி பிளாக் ஆகியவை இணைந்திருப்பதற்கான ஏற்பாடு களும் உள்ளன.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : சமீபகாலத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதிக்கு வரக்கூடிய கூட்டத்தைப் பார்க்கும்போது அதுவே ஒரு சுற்றுலாக் கேந்திரமாக மாறிவிட்டதுபோல் இருக்கிறது. ஆகவே, அங்கு ஒரு நவீன ஓட்டல், ஸ்விம்மிங் பூல், விளையாடுவதற்கான இடம் ஆகியவற்றை எல்லாம் உருவாக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : சட்டமன்ற விடுதிக்கு அருகில் கூவம் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் இந்தியாவிலேயே இல்லாத பெரிய "ஸ்விம்மிங் பூல்" கட்டப்பட்டுள்ளது. அதை அங்கத்தினர் அவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

1972 டிசம்பர் 12]

திரு. எம். தேவராசன் : உதகையில் புதிதாகக் கட்டப்பட்டு வரும் உல்லாசக் குடில்களின் வேலை முடிந்து விட்டதா? எப்போது சுற்றுலாப் பயணிகளுக்குத் திறந்து விடப்படும்?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : உதகையில் புதிதாகக் கட்டப் பட்டு வரும் உல்லாசக் குடில்களின் வேலை முடியும் தருவாயில் இருக்கிறது. விரைவில் பொதுமக்களுக்குத் திறந்து விடப்படும்.

திரு. ஆ. பரந்தாமன் : சென்னையில் அமைய இருக்கிற சுழலும் ஓட்டல் எந்த நிலையில் இருக்கிறது?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அது அரசின் ஆலோசனையில் இருக்கிறது.

திரு. த. சோனையா : தமிழ்நாட்டில் இருந்தும், அகில இந்தியா, விலிருந்தும் இராமேஸ்வரத்திற்கு நிறைய சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். அங்கு ஒரு புதிய ரக ஓட்டலைக் கட்ட அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இராமேஸ்வரத்தில் ஒரு சுற்றுலா விடுதியைக் கட்ட 6 லட்சம் ரூபாயை மத்திய அரசிடத்தி லிருந்து சுற்றுலா கார்ப்பரேஷன் பெற்றிருக்கிறது. $1\frac{1}{2}$ லட்சம் ரூபாய் செலவு செய்து பாதைகள் அமைக்கப்பட்டு விட்டன. கடந்த 19-ஆம் தேதி அங்கு சுற்றுலா விடுதிக்கு அடிக்கல் நாட்டு விழாவில் என்னுடைய தலைமையில் மத்திய அரசு சுற்றுலா அமைச்சர் சரோஜினி மகிஷி உரை ஆற்றினார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. இராசமாணிக்கம் : வேளாங்கண்ணிக்கு அகில உலகத்தி லிருந்தும் மக்கள் வருகிறார்கள். அங்கு சுற்றுலா விடுதி ஒன்று கட்டப்படுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : திருத்தலங்கள் இருக்கிற எல்லாப் பகுதிகளிலும் இப்படிப்பட்ட சுற்றுலா விடுதிகள் அமைக்கப் பட வேண்டுமென்று அரசு கருதிக் கொண்டிருக்கிறது. வேளாங் கண்ணியில் சுற்றுலா விடுதி கட்டப்படுவது அரசின் ஆலோசனையில் இருக்கிறது.

திரு. இரா. இராமலிங்கம் : தூத்துக்குடி துறைமுகப் பகுதியில் பெரிய ஓட்டல் ஒன்று கட்ட டூரிசம் டெவலப்மெண்ட்

கார்ப்பரேஷனிடம் திட்டம் இருக்கிறதா? தனி நபர்கள் ஓட்டல் கட்ட முன்வந்தால் அரசு உதவி செய்யுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தனி நபர்கள் சுற்றுலா விடுதிகள், ஓட்டல்கள் கட்ட முன்வந்தால் தமிழ்நாடு "இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன்" உதவி கொடுத்து வருகிறது. இப்போது இருக்கிற சுற்றுலா கார்ப்பரேஷன் எல்லா மாவட்டங்களிலும் எந்தெந்த இடங்களில் விடுதிகளை அமைக்கலாம், ஓட்டலை அமைக்கலாம் என்ற பரிசீலனையில் ஈடுபட்டிருக்கிறது. அந்த ஆராய்ச்சி முடிந்தால் தூத்துக்குடியும் பயன் பெறும்.

திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன் : சாத்தனூர் அணையைப் பார்க்க ஆயிரக்கணக்கான மக்கள் வருகிறார்கள். அங்கு இப்பேர்ப்பட்ட விடுதிகளைக் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாவட்டங்கள்தோறும் இந்த ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. அது பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. பரிசீலனை முடிந்த பிறகு சாத்தனூர் பற்றியும் கவனிக்கப்படும்.

திரு. கு. காமாட்சி : அதே கேள்வி—கல்லணையில் உண்டா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : கல்லணைக்கும் அதே பதில் தான்.

Air service for tourists

* 138 Q.—THIRU N.K. PALANISWAMY : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether this Government has represented to the Centre to give permission to import small planes for the inter-district travels of the tourists; and

(*b*) if so, whether any reply has been received therefor?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : நம்முடைய நாட்டின் தென்கோடியில் இருக்கும் கன்னியாகுமரிக்கு பிரதமரும், குடியரசுத் தலைவரும், மற்றவர்களும் வருகிறார்கள். அங்கு ஹெலிகாப்டரைப் பயன்படுத்து